# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

# குருதீபம்
Gurutheepam

10.10.2021 சிறப்பிதழ் 04





**திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன், முதுநிலை விரிவுரையாளர் அவர்களின் மணிவிழா நன் நாளில் வெளிவருகின்ற குருதீபம் சிறப்புச் செய்திமடல்!**

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



**"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்."**

அமைதியும் பண்பும் நிறைந்த, அதிர்ந்து கதைக்கத் தெரியாத திருவாளர் கி.கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழா நன்நாளில் வெளி வருகின்ற குருதீபம் சிறப்புச் செய்தி மடலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். ஆரம்பப் பிரிவு முகிழ்நிலை ஆசிரியர்களின் பொறுப்பாளர். அப்பதவியிலிருந்து ஆசிரிய மாணவர்களின் பூரணத்து வமான ஆசிரியர் கல்வியில் பெற வேண்டிய, ஒழுக்கம். விழுமியம், கல்வி சார்ந்த மற்றும் இணைப்பாடவிதானம் சார்ந்த சகல பயிற்சிகளையும் அவர்கள் அடைதற்கு வழி சமைத்து ஓர் தனித்துவமான முத்திரையை பதித்து நிற்பவர்.

இப்புவிக்கு கல்வி வல்லுநர்கள் பலரையீந்த வடமராட்சி மண்ணின் மைந்தனாகிய இவர் தனது அறிவு முதிர்ச்சியினால் ஏற்பட்ட மௌனப் புன்னகையினால் முரண்பாடுகளற்ற பண்பாட்டுக் கோலமொன்றினை வெளிப்படுத்தியவர். இவரின் மௌனம் பேசும். தனது கல்விப்பணி மட்டுமன்றி கல்வியியற் கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும் தவறாமல் பங்கேற்பவர்.

கனக்கக் கதைக்காமல் காரியம் சாதிக்க வல்லவர்கள் உலகில் உண்டு என்பதற்கு இவரே முதல் எடுத்துக் காட்டு. ஆரம்பக்கல்வி மன்றத்துக்குப் பொறுப்பாளர் என்ற வகையில் சிறுவர் தின நிகழ்வுகளிலும் முதியோர் தின நிகழ்வுகளிலும் பலவகையான முன்மாதிரியான செயற்பாடுகளை மேற்கொண்டு ஆசிரிய மாணவர்களுக்கு வழி காட்டியாக செயற்பட்டமை அனைவரும் அறிந்ததே.

கோப்பாய் பிரதேசத்தில் எமது கல்வியியற் கல்லூரி அமைந்துள்ளதுடன் அப்பிரதேச மக்களின் ஆதரவுடன் இத்தனை காலமும் இயங்கி வருகின்றது. அப்பிரதேசத்தில் வசிக்கும் முதியோர்களை கௌரவப் படுத்தும் வகையில் நாம் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு தந்து செயற்படுத்தியவர். அதே போன்று சிறுவர் கௌரவிப்பிலும் கூட தோள் கொடுத்து நின்றவர்.

தலைமைத்துவம் என்பது ஆளுக்காள் வேறுபடும் இயல்பு உடையது. ஒருவரின் நடை, உடை, பாவனை, சொல். செயல், சிந்தனை என்பன பிறரில் செலுத்தும் செல்வாக்கு அவருடைய தலைமைத்துவப் பாங்கினை மற்றவரில் அவர் அறியாமலேயே பிரதிபலித்துச் செல்வாக்கினை ஏற்படுத்தி அவர்களையும் ஆட்கொண்டு விடுகின்றது. அவ்வாறே திரு.கிருஸ்ணயோகன் அவர்களின் செயற்பாடுகள் மாணவ ஆசிரியர்களில் முன்மாதிரி நடத்தைகளினை ஏற்படுத்தி யிருக்கும் என்பது வெளிப்படையுண்மையாகும்.


தொடர்ச்சி 2ம் பக்கத்தில்...


## மணிவிழா நாயகனை வாழ்த்தி மகிழ்கிறோம்!



**திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன்**
**முதுநிலை விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**


**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.**

***போசகர்:***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்:***

செல்வி செ.செல்வமலர்
திரு. தி.ஜெயகாண்டீபன்
திருமதி. செ.சிவபாதம்
உப பீடாதிபதிகள்

***பிரதம ஆசிரியர்***

திரு.ம.நிரேஸ்குமார்

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

**பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி...**

தாய் நிலம், தகப்பன் விதை, குரு பசளை என்பார்கள். அந்த வகையில் இடம் சார் பெற்றோர் (Logo parents) என்ற நிலையினை முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கில் வெளிக்காட்டுமாறு மனப் பதிவினை ஏற்படுத்திய திரு.கி.கிருஸ்ணயோகன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும். இவரின் அளப்பரிய பணிகளுக்கு உறுதுணையாக இருந்த அவரின் துணைவி மற்றும் பிள்ளைகள் அனைவருக்கும் மகிழ்வான எதிர்காலம் அமையவும் இறைவனை வேண்டி அமைகின்றேன்.

**நீண்ட நாள் முழுதும்**
**கணத்திற்கக் கணம்**
**நேர்மையாய், துணிவாய்,**
**உண்மையாய் உழைக்கிறவன்**
**கரங்களே அழகிய கரங்கள்.**

**- அப்துல் கலாம்**

**திரு.சு.பரமானந்தம்**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**உப பீடாதிபதியின் (நிதியும் நிர்வாகமும்) வாழ்த்துச் செய்தி!**

"உண்மையிலேயே தன்னலமில்லாச் சேவையாளன். ஆராவாரங்கள் ஆர்ப்பரிப்புக்கள் இவனுக்குத் தேவையில்லை. ஏனெனில் இவன் "Original" தன் கருமம் அதனைச் சரியாகச் செய்வதற்கான அர்ப்பணிக்கும் பண்பு மற்றவர்களைத் தனக்கு மேலாக மதிக்கும் இயல்பு. எப்பொழுதும் மாணவர்பால் கரிசனையுடன் அவர்களை மிகச் சரியாக மதிப்பிட வல்ல மதிப்பீட்டாளன். இவனைப் போல் மனிதனைக் காண்பது அரிது! இது நான் கூறவில்லை. என்னுடைய அதியகம் கூறியவை.

**திரு.தி.ஜெயகாண்டீபன்**
**உப பீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**

**திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்களுக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துக்கள்!**

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், விழுமியம், பண்பு, அமைதி, கருணை, ஆழ்ந்த ஞானம், பொறுமை, புன் சிரிப்பு, முன்மாதிரி... இத்தனைக்கும் உதாரண புருஷனாக ஒருவரால் வாழ முடியும் என்றால் அது எங்கள் கிருஸ்யோகன் சேர்தான்!

உங்கள் ஒவ்வொரு அசைவிலிருந்தும் நாங்கள் கற்றுக் கொண்டவை ஏராளம்! எமது கல்லூரியிலிருந்து வளியேறும் ஒவ்வொரு ஆசிரியர்களிலும் உங்களது பண்புகள் நிச்சயமாக மிளிரும். ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் என்பதற்கான என் வரைவிலக்கணம் என்றால் அது "கிருஸ்ணயோகன் சேர்!"

இன்று உங்கள் அரச சேவை நிறைவு நாள்! ஆனால் உங்கள் கல்விச் சேவை இன்னும் தொடரும் என்பது எங்களின் அசைக்க முடியாத நம்பிக்கை...

அரச சேவை நிறைவுக்குப் பின்னரான உங்கள் அடுத்த கட்ட வாழ்க்கையில் நீங்கள் எல்லா வகையான சிறப்புக்களையும் பெற்று, சிறந்த உடல் - உள ஆரோக்கியத்துடன் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து, உங்களால் உங்கள் குடும்பமும், கல்விச் சமூகமும், சிறப்படையும் என்பது எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை! அதற்கான எல்லா வல்லமையையும் இறையாசியையும் ஆண்டவன் உங்களுக்கு வழங்க வேண்டுமென அவன் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

இந்நன்னாளில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**ம.நிரேஸ்குமார்**

**அன்புக்குரிய கிருஷ்ணயோகன் சேர்**

பணிநிறைவு நாளில் உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன். அமைதியாக நீங்கள் அளித்த சேவை கண்டு மகிழ்ந்த கல்லூரி அன்னை மீண்ட ஒரு போதில் தேடிடவும் கூடும்.

**திருமதி.பப்ஸி மரியதாசன்**
**முதுநிலை விரிவுரையாளர்.**

**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.**

# மாணவ ஆசிரியர்களை வழிப்படுத்துவதில் ஒரு போதும் பின் நிற்காத திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்கள்...







களப் பயணத்தில் மாணவ ஆசிரியர்களுடன் வழி காட்டும் நண்பனாக...










This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் அனைத்திலும் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் பங்களிப்புக்கள்...



தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை வாஞ்சையுடன் கற்கும் மாணவனாக...



விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில்...





ஆரம்பப் பிரிவு மாணவ ஆசிரியர்களின் கண்காட்சியைப் பார்த்து ஆலோசனை வழங்கும் தருணத்தில்....



ஆசிரியர் தினத்தில் மாணவர்களினால் கௌரவிக்கப்பட்ட வேளையில்...



ஆசிரிய கல்வியின் ஆணையாளர் மற்றும் விரிவுரையாளர் குழாத்தினருடன்...



தேசியக் கொடிக்கு மரியாதை செய்யும் தருணம்...



கல்லூரியில் பச்சை வீடு அமைக்கப்பட்ட தருணத்தில்...

**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.**

## 2020ம் ஆண்டு சர்வதேச சிறுவர் - முதியோர் தினத்தை ஒழுங்கு செய்து மிகச் சிறப்பாக நடத்திய வேளையில்...












கடமையே கண்ணாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் திரு.கி.கிருஷ்யோகன் அவர்கள்...



சர்வதேச ஆசிரியர் தினம் ஒன்றில் மாணவ ஆசிரியர்களினால் கௌரவிக்கப்பட்ட தருணம்!




This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10$^{th}$ of October 2021.

**கல்லூரிச் சமூகத்தினர் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் அரச சேவை நிறைவு நாளில் (08.08.2021) அவரை வாழ்த்தி மகிழ்ந்த தருணங்கள்...**















**This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.**

**கல்லூரிச் சமூகத்தினர் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் அரச சேவை நிறைவு நாளில் (08.08.2021) அவரை வாழ்த்தி மகிழ்ந்த தருணங்கள்...**

**அரசசேவை நிறைவு நாளில் கையொப்பமிட்ட தருணம்...**









**தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மன்றத்தின் மணிவிழா வாழ்த்துக்கள்!**




**சக விரிவுரையாளர் திரு.அ.லோகநாதன் அவர்களின் மணிவிழா வாழ்த்துக்கள்!**




This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.

## திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன், முதுநிலை விரிவுரையாளர் அவர்களை வாழ்த்தி மகிழும் நல் உள்ளங்கள் சில...

### கிருஷ்ணயோகன் சேர்

அரசசேவையின் கடமை நிறைவு நாள் இன்று! எல்லோருக்கும் நியதி இது. ஆயினும் கல்விப்பணி சமூகப் பணியாய் மிளிர வாழ்த்துகின்றோம்.

**திரு.திருமதி.நாகேந்திரன்**
**முதுநிலை விரிவுரையாளர்கள்**

### Happy Birthday Wishes Sir!

May God give his blessings on you forever. Have wealthy, peaceful, healthy & happy life ever.

**Mrs.Sumathy Srisundararajah**
**Senior Lecturer**

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் கிருஷ்ணயோகன் சேர்...

சகல சிறப்புக்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் பாரினில் வாழ்க! தன்னலமற்ற தங்களின் சேவை மகத்தானது. ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல வித்தகர் உங்களுக்குத் துணையாக இருப்பார். வாழிய பல்லாண்டு வாயார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ஜெ.உதயகுமார்**
**முதுநிலை விரிவுரையாளர்**

### இன்றைய வலம்புரி பத்திரிகையில் வெளியாகியுள்ள மணிவிழா வாழ்த்துச் செய்தி...



10.10.2021 வலம்புரி பக்கம் 07

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்**

**Mr. Krishnapillai Krishnayogan**
Senior Lecturer
Mathemathics (Special Trained),
B.Sc.,P.G.D.E., M.Ed.
Sri Lanka Teacher Educators' Service -
Jaffna National College of Education.

**Service Particulars**
Ku/Mummana Muslim Maha Vidyalayam
01.02.1984 – 31.12.1985
Palaly Teachers' Training College
01.01.1986 - 31.12.1987
Ku/Mummana Muslim Maha Vidyalayam
01.01.1988 – 08.05.1994
J/ Nelliady Madhya Maha Vidyalayam
09.05.1994 -18.03.2002
Jaffna National College of Education
19.03.2002 – 10.10.2021

**Message from the Chief Commissioner (Teacher Education)**

It is very delightful to send this message of facilitation to Mr. Krishnapillai Krishnayogan, on his retirement from his 20 years dedicated service as a lecturer at Jaffna National College of Education.

Mr.K. Krishnayogan has been contributing a lot in producing competent teachers through his sincere work which created a strong reputation among the student teachers. He has a positive attitude in extending his service in management activities also. His institutional personality has made it possible to run the institution efficiently.

Though he has maintained good rapport with the students, he has been stern in maintaining discipline adhered the code of ethics. He always concerns the perfection of his professional and social roles which are highly appreciated by his colleagues and students.

I would like to express my congratulations for his yeoman services to the development of education.

I wish him a long life with peace and prosperity in his retired period.

E.M.S.Eakkanayake,
Chief Commissioner,
Teacher Education.

### வாழ்வாங்கு வாழ்க கிருஷ்ணரே!

ஆரம்ப கணிதம் சிரம்கொண்டு!
ஆசிரியம் தழைக்கும் வேர்கொண்டு!
மணிவிழா யோகன்!
நன் மாண்புடை கிருஸ்ணன்!
அணிவிழா யாவும் அடைக! - மணவிழா
தந்த நறுமணத்தைத் தாங்கி வளர்கவே
எந்தப் பொழுதும் இனித்து!
அறுப தென்னும் அகவையினை
அடைந்த நண்பர்! கணிதக் கவி!
இருபதென்னும் இளமையுடன்
இதயம் இருக்கக் காண்கின்றேன்!
உறுவ தெல்லாம் உயர்ந்தோர்கள்
உரைத்த நெறியே! நற்பணியே!
அறுகம் புல்போல் மனைதழைத்து
ஆள்க எங்கள் கிருட்டினரே!
பிள்ளைச் செல்வம் உயர்ந்தோங்க!
பெற்ற செல்வம் நிறைந்தோங்க!
கொள்ளை கொண்ட நன்மனையாள்
கொஞ்சும் இன்பம் கொழித்தோங்க!
கிள்ளைப் பேர்த்தி பேரன்கள்
கீர்த்தி யோடு பிறந்தோங்க!
வெள்ளை மனத்தோன் திருவருளால்
வெல்க வாழ்வை கிருட்டினரே!
கற்ற கல்வி மணந்திடவும்
கணிதம் வாழ்வில் கமழ்ந்திடவும்
உற்ற உறவு நண்பர்கள்
உயிராய் இருந்து மகிழ்ந்திடவும்
பெற்ற பெருமை பேறெல்லாம்
பெருகி நன்றே திகழ்ந்திடவும்
நற்ற வத்தோன் அருள்நல்க
வாழ்க வாழ்க கிருட்டினரே!
வாழ்க குடும்பம் பல்லாண்டு!
மேவுக காதல் கொண்டங்கு!
ஆரம்ப கணிதம் சிரம்கொண்டு!
ஆசிரியம் தழைக்கும் வேர்கொண்டு!
அளவை கற்றல் வீறுகொண்டு!
அன்புடன் ஆண்டாய் பல்லாண்டு!
இவ்வுலகு போற்றும் பல்லாண்டே
ஏற்பீர் வாழ்த்தை கிருட்டினரே!

**என்றென்றும் அன்பான பொன். விஜய்**

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 10th of October 2021.